Approved by the Tamil Text Book Committee. 12-6-34.

# Correlative Lessons

## BOOK I

—FOR—

## KINDERGARTEN UPPER DIVISION

முதலாம்

# தொடர்புறு பாட வாசகம்.

(மேற்பிரிவு)

இலங்கை வித்தியாபகுதியாரால்
உவந்தேற்றுக்கொள்ளப்பட்டது. (12-6-34)



ஆ. வி. சோமசுந்தரம் அவர்கள்
இயற்றியது.

The Navalar Press, Jaffna.

*All Rights Reserved.*

Sixth Edition.
1947.

12939

73
14805
7. 6. 1968

370.2844
சோமசு
SL/PR

அன்பளிப்பு
மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# தொடர்புறு பாட வாசகம் 1.

த.ப 12939

மேற்பிரிவு.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சபை,
பதிவு இல. 73
10. 5 1950
அறக்கட்டளை நிலையம்
கசெட இல. 14805
7 6. 1968



## பாடம் 1.

### பசு.

| | | | |
|---|---|---|---|
| அம்மா | வா. | இது | பசு. |
| பசு | பார். | தலை | ஒன்று. |
| பால் | கற. | கால் | நான்கு. |
| பால் | தா. | வால் | ஒன்று. |
| பால் | குடி. | கண் | இரண்டு. |
| பால் | வெள்ளை. | காது | இரண்டு. |

## பாடம் 2.



மாட்டு வண்டி

இரண்டு மாடுகள்.




குதிரை வண்டி.

இரண்டு குதிரைகள்.

மோட்டார் வண்டி.

அழகான வண்டி.





புகை இரதம், புகை வண்டி.



தள்ளு வண்டி.

இழுவை வண்டி.






பாய்க் கப்பல்.


புகைக் கப்பல்.





ஆகாயக் கப்பல்.

ஆகாய விமானம்





புல்லக்கு வண்டி.

முத்துச் சிவிகை.

மின்சார வண்டி.

இயந்திர வண்டி.





ஒற்றைச் சுவட்டு வண்டி.

துவிச்சக்கர வண்டி.

பாடம் 3.

## மாடு.



ஆண் மாடு எருது.



எருது வண்டி இழுக்கும்.

எருது உழ உதவும்.





பெண் மாடு பசு
பசு பால் தரும்.
பால் தயிர் ஆகும்.
தயிர் மோர் ஆகும்.

பசு புல் மேயும்.

புல் நிறம் பச்சை.





கன்று ஒன்று பார்.
கன்று பால் குடிக்கும்.
கன்று ஓடி விளையாடும்.



பாடம் 4.

## கோழி.





ஆண் கோழி சேவல்.
சேவல் சண்டை போடும்.
சேவல் கூரை ஏறும்.
சேவல் காலையில் கூவும்.



பெண் கோழி பேடு.
பேடு முட்டை இடும்.
முட்டை குஞ்சு ஆகும்.

பாடம் 5.

## மரம்.



இது ஒரு செடி
மா ஒரு மரம்.
சிறு மரம் செடி.
சிறு செடி பூண்டு.
புல் ஒரு பூண்டு.
கத்தரி ஒரு செடி.


நிலத்தில் கீழே இருப்பது வேர்.
மரத்தில் இலை, பூ, காய், கனி உண்டு.



இது ஒரு அழகான பூ.
பூ நல்ல மணம் வீசும்.
பூவில் தேன் உண்டு.
வண்டுதேனை உண்டுபாடும்.
பூ காய் ஆகும்.
காய் கனி ஆகும்.

பாடம் 6.

## மீன்.



இது ஒரு மீன்.
மீன் நீரில் வசிக்கும்.
மீன் நீரில் நீந்தும்.
மீனுக்கு கைகள் இல்லை.
மீனுக்கு கால்கள் இல்லை.
மீன் முட்டை இடும்.
முட்டை குஞ்சு ஆகும்.



## தவளை.



தவளை நீரில் வசிக்கும்.
தவளை நிலத்தில் வசிக்கும்.
தவளைக்கு கால்கள் நான்கு.
தவளை நீரில் நீந்தும்.
தவளை நிலத்தில் தத்தும்.

## ஆமை.



ஆமை கடலில் வாழும்.
ஆமை நிலத்தில் வசிக்கும்.
ஆமை நீரில் வசிக்கும்.


## முதலை.



முதலை அதிகமாக நீரில் வசிக்கும்.
முதலை நிலத்திலும் வசிக்கும்.
அது பிராணிகளைப் பிடித்துத் தின்னும்.

பாடம் 7.

## சுவை.





| | |
|---|---|
| பாகற்காய் | கசக்கும். |
| மாங்காய் | புளிக்கும். |
| கடல்நீர் | உவர்க்கும். |
| கடுக்காய் | துவர்க்கும். |
| மிளகாய் | உறைக்கும். |
| கரும்பு | இனிக்கும். |
| சுவைகள் | ஆறு. |



பாடம் 8.

## மா.



மா ஒரு பெரிய மரம்.
மா மரம் நிழல் தரும்.
மாங் கொட்டையில் இருந்து
மாமரம் ஆகும்.
மாம் பூ கொத்துக் கொத்தாக
இருக்கும்.
மாங்காய் குலை குலையாக இருக்கும்.
மாங்காய் புளிக்கும்.
மாம்பழம் இனிக்கும்.

பாடம் 9.

## நிறம்.





பால் வெள்ளை நிறமானது.
காக்கை கருமை நிறமானது.
புல் பச்சை நிறமானது.
இரத்தம் சிவப்பு நிறமானது.
பொன் மஞ்சள் நிறமானது.
ஆகாயம் நீலநிறமானது.


### என்ன நிறம்?

| | | | |
|---|---|---|---|
| பவளம் | --- நிறம். | கிளி | --- நிறம். |
| முத்து | --- நிறம். | மோதிரம் | --- நிறம். |
| வைரம் | --- நிறம். | இலை | --- நிறம். |
| சுவர் | --- நிறம். | குடை | --- நிறம். |



பாடம் 10.

## காக்கை.



1. காக்கைகளே! காக்கைகளே!
கருமையான காக்கைகளே!

2. காலையிலே துயிலெழுந்து
கரையும் நல்ல காக்கைகளே!

3. மாலையிலே குளித்து விட்டு
மனைக் கேகுங் காக்கைகளே!

4. இனத்தோடு உண்வருந்தும்
இணக்கமுள்ள காக்கைகளே!

5. பாலர்கள் கையிலுள்ள
பண்டங்களைத் திருடுவதேன்?

## படத்தைச் சேர்த்து வாசி.

 எலி பிடிக்கும்.

ஒரு  வாங்கி வா.

இது ஒரு சீப்பு 

 நிலத்தில் விழுந்தது.

 நீரிலும் நிலத்திலும் வசிக்கும்.

 தேனை உண்டு பாடும்.

எனக்கு  வாசிக்கத் தெரியும்.

இது என்னுடைய 

ஒரு பந்து  கொண்டு வா.

ஒரு  எடுத்து வா.



பாடம் 12.

## நல்ல பிள்ளைகள்.



1. அதி காலையிலே எழுந்திடுவோம்
அன்னை தந்தையைத் தொழுதிடுவோம்.

2. கைகால் சுத்தம் பண்ணிடுவோம்,
கடவுள் பாதம் எண்ணிடுவோம்.

3. புத்தகத்தை எடுத்திடுவோம்
புதிய பாடம் படித்திடுவோம்.

4. நல்ல பிள்ளை நாமென்று
நடந்து கொள்வதே நன்று.

5. துஷ்டப் பிள்ளை நேசமே
துன்பம் செய்யும் மோசமே.

6. மெய்யே என்றும் பேசுவது
மிக்க நன்மை யாகுமது,

பாடம் 13.


## தொழில்கள்.



தச்சன் மர வேலை
செய்கிறான்.
கன்னான் பித்தளை வேலை
செய்கிறான்.

தட்டான் நகைகள் செய்கிறான்
செம்படவன் மீன் பிடிக்கிறான்.





கொல்லன் இரும்பு வேலை செய்கிறான்.



குயவன் மட்பாண்டம்
செய்கிறான்.
சேணியன் சீலை நெய்கிறான்.

அம்பட்டன் சவரம்
செய்கிறான்.
மாணாக்கன் பாடம்
படிக்கிறான்.







ஒரு பெண் காய்கறி விற்கிறாள்.
ஒரு மனிதன் அப்பம் விற்கிறான்.
வண்ணான் சீலை வெளுக்கிறான்.
ஒருவன் மூட்டை தூக்குகிறான்.

பாடம் 14.

## மிருகம்.



நாய் நன்றி உள்ள மிருகம்.
அது காவல் காக்கும்.
நாய்க்கு அறிவு உண்டு.
நாய் குரைக்கும்.

பூனை எலி பிடிக்கும்.
பூனை பால் குடிக்கும்.
பூனைக்கு இரவில் கண்
தெரியும்.
பூனைக்குட்டி ஓடி விளை
யாடும்.





ஆண் ஆடு கடா.
பெண் ஆடு மறி.
வெள்ளாட்டுக்கு நீண்ட
கொம்புகள் உண்டு.


செம்மறி ஆட்டில் மயிர்
அதிகம்.
ஆடுகள் மந்தையாகப்
போகும்.





குதிரை வேகமாய் ஓடும்.
குதிரை வண்டி இழுக்கும்.
பிடரியில் மயிர் உண்டு.
நீண்ட வால் உண்டு.
குதிரைக்குக் கொம்புகள்
இல்லை.

கழுதை குதிரை போல்
இருக்கும்.
பிடரியில் மயிர் இல்லை.
நீண்ட காதுகள் உண்டு.
கழுதை பாரம் சுமக்கும்.





பாடம் 15.



ஒட்டகம் உயரமான மிருகம்.
அதன் கால்கள் நீளமா
யிருக்கும்.
அதன் கழுத்து மிகவும்
நீளம்.

மான் பசுக் கன்று போல்
இருக்கும்.
அதன் வால் கூழை.
கொம்பு பல கிளைகள்
உடையது.
அது புல்லு மேயும்.





யானை பெரிய மிருகம்.
யானை காட்டு மிருகம்.
பழகின யானை வேலை
செய்யும்.
யானைக்குத் தும்பிக்கை
உண்டு.
யானை இலைகாய்களைத்
தின்னும்.



குரங்கு மரங்களில் வசிக்கும்.
ஒரு மரத்திலிருந்து மற்றொரு
மரத்துக்குப் பாயும்.
அதற்கு நீண்டவால் உண்டு.
வாலில்லாத குரங்கும் உண்டு.
குரங்கு பழங்கள் தின்னும்.

பாடம் 16.

படத்தைச் சேர்த்து வாசி.

 புல் மேயும். பால் தரும்.

 வீட்டைக் காக்கும்.

 பாய்ந்து பாய்ந்து ஓடும்.

 சாதுவான மிருகம்.

இது ஒரு பெரிய 

இது என்னுடைய 

 நாட்டிலும்காட்டிலும்வசிக்கும்.



 வேகமாய் ஓடுகின்றது.

 அழுக்கில் வசிக்கும்.

 பூக்களில் இருக்கும்.

 நிலத்தில் ஊருகின்றது.

எத்தனை  உண்டு.

பாடம் 17.

## நண்டு.



1. கடலோரந் தன்னிலே
கட்டு மரச் சந்திலே
2. சின்னஞ் சிறு முனையிலே
சீவித்திருந்த நண்டுகளாம்.
3. குஞ்சும் தாயுமாய்க்
கூடி வெளியே சென்று

4. உல்லாசமாய் ஒருநாள்
உலாவி வந்தன.

5. அப்பொழுது குட்டி நண்டு
தப்பிதமாய்த் தன் தாயை

6. விட்டு விட்டு வெகுதூரம்
வேடிக்கையாய்ச் சென்றது.

7. அதைக் கண்ட பருந்தொன்று
அதி விரைவில் கொன்றது.

8. ஆகையினால் பாலர்களே
அன்புடனே என்றும்

9. பெரியோரைத் துணைக் கொண்
பிழைத்திடுவோம் நன்று. (டால்

பாடம் 18.




சிங்கம் காட்டில் வசிக்கும்.
சிங்கம் மிருகங்களைக்கொன்றுதின்னும்,
சிங்கம் கர்ச்சிக்கும்.






புலி கொடிய மிருகம்.
புலி மிருகங்களைக்
கொன்று தின்னும்.





கரடி. காட்டில் வசிக்கும்.
கரடி கறுப்பு நிறம் உடையது.
வெண்மையான கரடியும் உண்டு.




பன்றி அசுத்தமான
மிருகம்.
காட்டில் வசிப்பது
காட்டுப் பன்றி.

---

பாடம் 19.

# மிருகங்களின் தொனி.



நான் அதிகாலையில் எழும்பினேன்.
அப்பொழுது சேவல் கூவிற்று;
காகம் கரைந்தது.
நான் இராமன் வீட்டுக்குப் போனேன்.
என்னைப் பார்த்து நாய் குரைத்தது.
பூனை சீறி வந்தது; பின்பு உறுமினது.
வண்ணான் கழுதையை ஓட்டி வந்தான்.
அதைக் கண்டு குதிரை கனைத்தது.
கழுதை கத்தத் தொடங்கிற்று.
பின்பு ஒருவன் புல்லுக் கொண்டு
வந்தான்.
பசு "அம்மே" என்று கதறி அழுதது.
ஆடு "மேமே" என்று கத்தியது.



நான் உள்ளே போனேன்; அப்போது
கிளி பேசினது.
முற்றத்தில் நெல் குவித்து இருந்தது.
அதைக் கோழி தின்றது.
நான் கையால் ஓட்டினேன்.
கோழி கொக்கரித்தது; கூவிப் பறந்தது.
அங்கே பற்றையில் ஒரு நரி இருந்தது.
கோழியைப் பிடிக்க நரி ஓடி வந்தது.
நாங்கள் இருவரும் நரியை ஓட்டினோம்.
நரி ஊளையிட்டது.

பாடம் 20.

பிள்ளை என்ன செய்கிறது?


1



2


3


4

பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?


5


6


7

என்ன செய்கிறான்?



8 9 10 11 12

என்ன செய்கிறான்?




13 14 15 16

---



பாடம் 21.

# நாரை.




அரிய பெரிய நாரையாரே
அன்புடனே வாருமே,
நல்ல விருந்து பாருமே,

இந்தக் குளத்தின் அருகிலே
மீனும் நண்டும் அதிகமே,
பிரியமாகத் தின்றுமே,
சீராய் உண்டு மகிழுமே,
குறை இன்றி வாழுமே.

பாடம் 22.

# அவயவம்.



கண்கள் இரண்டினாலும் பார்க்கிறோம்.
காதுகள் இரண்டினாலும் கேட்கிறோம்.
மூக்கினால் மணக்கிறோம்.
வாயினால் உண்கிறோம், பேசுகிறோம்.
நாக்கினால் ருசி பார்க்கிறோம்.
பற்களால் உணவை மெல்லுகின்றோம்.
கைகள் இரண்டாலும் வேலை செய்கின்றோம்
கால்கள் இரண்டாலும் நடக்கின்றோம்
இரண்டுகையிலும்பத்துவிரல்கள் உண்டு.
விரல்களில் நகங்கள் உண்டு.
தலையில் மயிர்கள் உண்டு.



பாடம் 23.



ஒன்று-யாவர்க்கும்
தலை ஒன்று.
இரண்டு-முகத்தின்
கண் இரண்டு.



மூன்று-தேங்காயின்
கண் மூன்று.



நாலு-நாற்காலிக்
கால் நாலு



ஐந்து - கை விரல் ஐந்து.



ஆறு - ஈயின் கால் ஆறு.



ஏழு - வாரத்தில் நாள் ஏழு.
எட்டு - சிலந்தியின் கால் எட்டு.

ஒன்பது - தானிய வகை



ஒன்பது.



பத்து - இரு கைவிரல் பத்து.

பாடம் 24.

# சூரியன்.



சூரியன் அதி காலையில் கிழக்கே
உதிக்கும்.
அது மத்தியானம் உச்சியில் வரும்.
மாலையிலே மேற்கே மறையும்.
அது உஷ்ணமும் வெளிச்சமும்
தருகிறது.
சூரியனுள்ள நேரம் பகல்.
சூரியன் இல்லாத நேரம் இரவு.
இரவும் பகலும் சேர்ந்தது ஒரு நாள்.
ஏழு நாட்கள் சேர்ந்தது ஒரு வாரம்.

ஞாயிற்றுக்கிழமை திங்கட்கிழமை
செவ்வாய்க்கிழமை புதன்கிழமை
வியாழக்கிழமை வெள்ளிக்கிழமை
சனிக்கிழமை என நாட்கள் ஏழு.


நான்கு வாரங்கள் சேர்ந்தது ஒருமாதம்.
பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம்.



சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மார்கழி, தை, மாசி, பங்குனி என மாதங்கள் பன்னிரண்டு.

பாடம் 25.

# ஆனைகண்ட குருடர்.



1. ஆனை ஆனை என்கிறீர்;
ஆனை எப்படி இருக்குமோ?
2. ஆனை என்ன சின்னதோ?
அதிலும் பெரிது என்னவோ?
3. என்று பேசி ஆறு குருடர்
எழுந்து போனார் வீதியில்;
4. ஆனை பின்னே வந்தது
ஆடு மணியும் கேட்டது;

5. ஆனை ஓட்டும் பாகனை
ஆசையோடு கேட்டனர்;

6. பாகன் ஆனை நிறுத்தினான்
பார்க்கக் குருடர் சுற்றினார்;

7. ஒருவன் காதைத் தடவினான்
உருவம் ஆனை சுளகென்றான்;

8. கையை ஒருவன் தடவினான்
ஐயா உலக்கை போலென்றான்;

9. காலை ஒருவன் தடவினான்
ஐயா உரலைப் போலென்றான்;

10. வாலை ஒருவன் உருவினான்
வாய்த்த விளக்கு மாறென்றான்;

11. விலாவை ஒருவன் தடவினான்
சுலாவும் பெரிய சுவரென்றான்;

12. ஆனைப் பல்லைத் தடவினான்
ஆனை பாரை ஆமென்றான்;

13. என்று சொல்லி அறுவரும்
நின்று வாது பேசினார்;

14. தாங்கள் தாங்கள் கொண்டதே
உண்மை உண்மை என்றனர்.



பாடம். 26.

# நரியும் காக்கையும்.



காக்கை ஒரு துண்டு இறைச்சியைத் திருடியது. அது ஒரு மரத்தின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தது. ஒரு நரி அதைக் கண்டது.

நரி "நீ அழகான பட்சி. உன்னுடைய பாட்டு மிகவும் இனிமையானது. நான் உன்னுடைய பாட்டைக் கேட்க விரும்புகிறேன்" என்றது.

காக்கை, "காகா" என்றுகத்தினது. இறைச்சித்துண்டு கீழே விழுந்தது. நரி அதைக் கௌவிக் கொண்டு ஓடிற்று.

பாடம் 27.

## நரியும் திராட்சக் குலையும்



1. பசியால் மெலிந்த நரியொன்று
பல திசைகளிலும் பார்த்துழன்று

2. ஒன்றுங் காணாது ஓர் செடியில்
உயர்ந்த திராட்சக் கொடியில்

3. பழங்கள் குலை குலையா யிருந்தது
பழுத்துத் தொங்குவதைப் பார்த்து

4. எட்டி எட்டி ஆனமட்டும்
கெட்டித் தனங்கள் பார்த்துமே


5. ஒன்றும் எட்டாதது கண்டு
உள்ளத்தினாசை யெல்லாம் விட்டு



6. ஓ! ஓ! இந்தப் பழம் புளிக்கும்
தின்றவன் பல்லெல்லாம் இளிக்கும்

7. எனக்கேன் இந்தப் பழம் என்றே
ஏசிக்கொண்டு போயிற்றே.

பாடம் 28.



## பேராசையுள்ள நாய்.

ஒரு நாய் இறைச்சித் துண்டைக் கௌவிக்கொண்டுபோனது. அப்போது ஆற்றைக் கடந்து போகவேண்டி யிருந்தது. பெரிய இறைச்சித் துண்டு அகப்

பட்டதே என்று மிகவும் சந்தோஷத்துடன் பாலத்தின்மீது நடந்துபோனது.

அது தன்னுடைய நிழலை, பாயும் ஆற்று நீரில் கண்டது. உடனே அது தன்னுடைய இறைச்சித் துண்டிலும் பார்க்கப் பெரிய துண்டை இன்னொரு நாய் கொண்டுபோகிறது என எண்ணிக் கோபித்துக் குலைத்து, மற்ற நாயிடம் இருக்கும் துண்டைப் பறிக்க முயன்றது. அப்போது இறைச்சித் துண்டு பாயும் ஆற்று நீரில் விழுந்தது.

அது தான் கொண்டு போன இறைச்சித் துண்டை இழந்து விட்டுத் துக்கத்துடன் போனது. அதன் பேராசையினால் அதற்கு ஒன்றும் இல்லாமல் போய் விட்டது. ஆகையால் பேராசை ஒருபோதும் ஆகாது.

கீறிட்ட இடங்களை நிரப்பி வாசி:—

நாய்..................கடந்தது.

ஆற்று நீரில் தன்னுடைய..............கண்டது.

நாய்...............இழந்தது.



பாடம். 29

# மயில்.

மயில் மிகவும் அழகான பட்சி. ஆண் மயிலுக்குத் தோகை உண்டு. பெண் மயிலுக்குத் தோகை இல்லை. ஆண் மயில் சிறகை விரித்து ஆடும்.



அதன் தோகையைப் பார். எவ்வளவு நீளமாய் இருக்கிறது. தோகையில் கண்கள் போல அநேகம் இருக்கின்றன பார். அவை தங்கத்தைப்போல மினுங்குகின்றன. பச்சை, மஞ்சள், நீலம் ஆகிய மூன்று நிறங்களும் தோகையில் தெரியும்.

மயிலின் தலை சிறியது. இதன் கழுத்து நீளமாயும் நீல நிறமாயும் இருக்கும். அதன் தலையில் கொண்டை இருக்கின்றது.

மயில் காட்டில் வசிக்கும். அது பூச்சிகளையும் புழுக்களையும் தானியங்களையும் தின்னும்.

பாடம் 30.

## புல்.

1. நான் வளர்ந்த இடமோ
நடுத் தெருவு தானாகும்
2. எந்தன் மேல் சனங்கள்
எப்பொழுதும் நடந்தார்கள்
3. ஆட்டையும் மாட்டையும்
ஓட்டியே மேய்த்தார்கள்
4. அத்தனையும் சகித்து
அவ்விடமே இருந்தேன்
5. என்னது நிலைமை கண்ட
என்னருந் தோழனவன்
6. வானந் தன்னிலிருந்து
வாரி இறைத்தான் சலம்
7. அப்போது சனங்களெல்லாம்
அவர்க் குரிய பயிர்த் தொழிலை
8. செய்யவே சென்றதனால்
செழித்துமே வளர்ந்துவிட்டேன்

—ஸ்ரீ கிருஷ்ணசாமிநாயுடு.




## குருவிக்கூடு.



இது என்ன படம்? இது ஒரு குருவிக் கூட்டைக் காட்டும் படம்.

குருவிகள் கூடுகளை எங்கே கட்டு கின்றன? அவை கூடுகளை மிகுதியாய் மரங்களில் கட்டுகின்றன.

குருவிகள் கூடுகளைப் பலவிதமாகக் கட்டுகின்றன. தூக்கணங் குருவி நார்த் தும்புகளால் தன் கூட்டைப் பின்னு



கிறது. காகம் மரக் கவர்களில் சுள்ளி விறகால் தன் கூட்டை வளைத்து முடை கிறது. சிட்டுக்குருவி பஞ்சாற் பொதிந்து கூடு கட்டுகிறது. கிளி பொந்துகளிற் கூடு வைக்கிறது. காடை கவுதாரி நிலத்தில் கூடு கட்டுகின்றன.

குருவிகள் கூட்டில் முட்டை இடு கின்றன. முட்டைகளை இட்டபின் குருவி



அடை காக்கிறது. குருவியின் சூட்டால் முட்டைகளிலிருந்து குஞ்சுகள் பொரிக் கின்றன.

பாடம் 32.

## தென்னமரம்.



தென்னை மரமென்று என்னை
சிறுவர்களும் உணர்ந்திடுவார் 1.
கிளையின்றி நான் வளர்ந்த
கீர்த்தியைச் சொல்வேன் கேளீர் 2.
மணல் வெளி தன்னிலே
மகிழ்ச்சியுடன் வளர்வேன். 3.
அறுபதடி உயரத்திற்கும்
அதிகமாக வளர்ந்திடுவேன். 4.
உச்சியில் மட்டைகளைப்
பச்சையாக வைத்திருப்பேன். 5.

பழுத்தவுடன் ஒவ்வொன்ருய்
ஒழித்திடுவேன் எனை விட்டு. 6.

மதுரமான காய்களும்
மட்டையின் கீழ் தொங்கிடும். 7.

வீடுகட்ட உதவுவேன்
விளக் கெரிக்க உதவுவேன். 8.

மாடு கட்ட உதவுவேன்
மண் பெருக்க உதவுவேன். 9.

தித்திப்பான தேங்காயும்
தின்பதற்கு உதவுவேன். 10.

மற்றும் பலவிதத்திலும்
மனிதருக்கு உதவுவேன். 11.

— ஸ்ரீ கிருஷ்ணசாமிநாயுடு.

பாடம் 33.

## ஒற்றுமை.

ஒரு தேசத்திலே ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை செய்தார்கள். ஒற்றுமை இல்லாமல் இருந்தார்கள்.



தகப்பன் அவர்களை அழைத்து ஒரு விறகு கட்டைக்கொடுத்து, "நீங்கள் ஒவ்வொருவனுக இந்த விறகு கட்டை முறியுங்கள் பார்ப்போம்" என்ருன். அவர்களால் முறிக்க முடியவில்லை.



கிழவன் விறகு கட்டை அவிழ்த்து ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொன்ருகக் கொடுத்தான். "இப்பொழுது முறியுங்கள்" என்று சொல்ல மிக எளிதாக முறித்துப் போட்டார்கள்.

தகப்பன் தன் புத்திரரை நோக்கி, "பிள்ளைகளே, இவ்விறகு கட்டு ஒன்ருய் இருந்த பொழுது உங்களால் முறிக்க முடியாமற் போயிற்று. தனித் தனியே பிரித்த பொழுதோ மிக எளிதாக முறித்து விட்டீர்கள். நீங்கள் ஒற்றுமையாக இருந்தால் ஒருவரும் உங்களை மோசம் செய்து வெல்ல முடியாது" என்று சொன்னுன். அதன் பின் அவர்கள் ஒற்றுமையாக இருந்தார்கள்,

பாடம் 34.

## எறும்பு.



சின்னச் சின்ன எறும்பே
சிங்காரச் சிற்றெறும்பே
உன்னைப் போல நானுமே
உழைத் திடவே வேணுமே. 1.

பாலர் ஒன்றாய்க் கூடுவீர்
பண்டங் களைத் தேடுவீர்
புல மாக நாடுவீர்
புற்றில் கொண்டு போடுவீர். 2.

ஒன்றின் பின்னே ஒன்றாய்
ஊர்ந்து போவீர் நன்றாய்
நன்றாய் உம்மைக் கண்டு
நடந்தால் நலம் உண்டு. 3.

பாடம் 35.

## அடுத்தவரைக் கெடுக்கலாது.

ஒரு வியாபாரி சரக்கு வாங்கத் தூர தேசம் சென்றான். துணைக்கு அவனுடைய வேலைக்காரனும் போனான். அவன் கெட்டவன். மோசம் செய்பவன்.



ஒரு நாள் வழியில் இருட்டிற்று. அங்கே திருடர் பயம் உண்டு. இருவரும் சத்திரத்தில் தங்கினார்கள். வியாபாரி நித்திரை செய்தான். வேலைக்காரன் விழித்திருந்தான்.

அவன் மூட்டையில் பணமிருந்தது. மெல்ல அம் மூட்டையை வேலைக்காரன் அவிழ்த்தான்; பணத்தை எடுத்தான்; கட்டிக் கொண்டான்; ஒருவருக்கும் தெரியாமல் அவன் போய் விட்டான்.

வழியில் ஒரு திருடன் அவனை மறித்தான். கோலால் தலையில் ஒரு அடி போட்டான். வேலைக்காரன் கீழே விழுந்தான். பணம் திருடன் கையில் அகப்பட்டது. அவன் அதைக் கொண்டு போய் விட்டான்.

வேலைக்காரனை வியாபாரி அடுத்தான். அதனால் அவனும் கெட்டான். ஆகையால் அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்.

பாடம் 36.

## கேடு நினையாதே.

இரண்டு சிறுமிகள் ஒரு பூந்தோட்டத்துக்குப் போனார்கள். ஒருத்தி கபட



முள்ளவள்; மற்றவள் கபடமற்றவள். கபடமுள்ளவள் முன்னே போனாள். ஒரு பாம்புஓடிப்போய்புற்றிலேநுழைந்தது.



அதைக் கபடமற்றவள் காணவில்லை. கபடமுள்ளவள் "இப்புற்றிலே கையை இட்டால் காசு அகப்படும்" என்றாள்.

கபடமற்றவள் அதை நம்பித் தன் கையை இட்டாள். பொற்பணம் கிடைத்தது. அதைக் கண்ட கபடமுள்ளவள் தானுந் தன் கையை இட்டாள். உடனே பாம்பு அவள் கையைக் கடித்தது.

ஆதலால், பிறருக்குக் கேடு நினைத்தால் உடனே தனக்குக் கேடு வரும்.


பாடம் 37.

## வாத்து.

பட்சிகள் சில நீரிலே வாழ்கின்றன. சில நிலத்திலே வசிக்கின்றன. சில பறவைகள் நீரிலும் நிலத்திலும் வசிக்கும்.

வாத்து தண்ணீரில்நன்றாய் நீந்தும் அது நிலத்தில் நடக்கும் போதும் தன் உடம்பு முழுவதையும் அசைத்து அசைத்துச் செல்லும்.

அது தண்ணீரிலுள்ள பூச்சி, புழு, நண்டு முதலியவற்றைப் பிடித்துத்



தின்னும், நெல், வரகு முதலிய தானியங்களையும் தின்னும்.

பாடம் 38.

## புலியும் இடையனும்.

(முதற்பாகம்)

இடையன்: ஆடு மேய்த்து அலுத்துப் போய் விட்டது. இன்றைக்கு ஒரு விளையாட்டுச் செய்ய வேண்டும். செய்கிறேன் பார்.



(உரத்துச் சத்தம் போடுகிறான்)

புலி! புலி!! புலி!!!

(ஆட்கள் தடியும் பொல்லும் கொண்டு ஓடிவருகிறார்கள்.)

கமக்காரன்: புலி எங்கே? புலி எங்கே?

இடையன்: புலி வரவில்லை, நான் வேடிக்கைக்காகக் கூப்பிட்டேன்.



கடைக்காரன்: ஆ! புலி எங்கே?

இடையன்: புலி வரவில்லை. நான் சும்மா சத்தம் வைத்தேன்.

இப்படி இருக்கையில் சிங்கம் ஒன்று அவ்வழியே வந்தது. சிங்கம் மிருகங்களுக்கு இராசா. அதை யானை



யும் ஒட்டகமும் அதி தூரத்திலே கண்டன. கண்டவுடன் இரண்டும் செருக்கு அழிந்து ஓடிப் போயின. ஆதலால் யாவருக்கும் செருக்கு ஆகாது.

1. கீறிட்ட இடங்களை நிரப்பி வாசி.—
   யானை.............................மிருகம்.
   ஒட்டகம்...................மிருகம்.
   சிங்கம் மிருகங்களுக்கு.................
   சிங்கத்தைக் கண்டவுடன்.......... ஓடிப்போயின.
2. காட்டில் வாழும் ஐந்து மிருகங்களின் பெயர் சொல்லு.

---



பாடம் 40.

## தண்ணீர் அள்ளுதலும் சமைத்தலும்.

(சிறுவர் கும்மி.)

வாருங்கள் வாருங்கள் தோழிப்
பெண்காள்—நாம்
வளைந்து கும்மி யடிப்போமே
பாருங்கள் காட்டுவோம் பெண்டுகள்
செய்கிற
பற்பல வேலைகள் தோழிப் பெண்காள்.

தண்ணீர் இறைக்கிற பெண்ணையும்
பார் அவள்
தாம்புக் கயிறிடும் வேடிக்கை பார்
தண்ணீர்க் குடத்தை இடுப்பிலே
வைத்தவள்
ஏகிறாள் வீட்டிற்குத் தோழிப்பெண்காள்.

உலையை அடுப்பிலே ஏற்றி வைத்தவள்
ஒடித்த விறகை அதிலே மாட்டித்
தலையை அசைத்து அரிசி அரிக்கிற
சாயலைக் காட்டுவோம் தோழிப்
பெண்காள்.

அள்ளி மிளகும் மல்லியும் மஞ்சளும்
அம்மியில் வைத்தாள் அதிலிருந்து
தள்ளிக் குழவியைத் தன்னால் அசைக்கிற
சாயலைக் காட்டுவோம் தோழிப்
பெண்காள்.

சல்லடைகொண்டுசலிப்பாளாம்-- அவள்
தாங் கைகொண்டு புடைப்பாளாம்
மெல்லிய தவிட்டைக் கூடையில்வாரியே
வைத்துக் கொள்வாளாம் தோழிப்
பெண்காள்.

குறிப்பு:— பிள்ளைகள் வளைந்து நின்று கும்மி யடித்துப் பாடும்போது அந்தந்த வசனத்திற் சொல்லியிருக்கிறபடி அபிநயஞ் செய்யவும்.

பயிற்சி:—இந்தப்பாட்டில்காணும் 10சொற்கள் வெவ்வேறு கோடுகளில் இருக்கின்றன. அவற்றின் எழுத்துக்களைத் தெரிந்து சேர்த்துச் சொற்களைச் சொல்லவும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | கு | ள் | டை | கூ | ள | ற |
| அ | ச | ல் | ல | ரி | வி | லை |
| ஞ் | ட | ம் | மி | கி | லி | உ |

# பாடசாலைகளுக்கு வேண்டிய புஸ்தகங்கள்.

## வித்தியா பகுதியாரின் அங்கீகாரம் பெற்றவை.

| புதிய இலகுபோத பாலபாடங்கள் | சதம் |
|---|---|
| பிள்ளைப்பாடம் .... ... | 40 |
| முதற் பாலபாடம் .... .... | 40 |
| இரண்டாம் பாலபாடம் ... .... | 50 |
| மூன்றாம் பாலபாடம் ... .... | 60 |
| நான்காம் பாலபாடம் ... ... | 70 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... | 75 |
| ஆறாம் பாலபாடம் ... .... | 75 |

| தொடர்புறு வாசகங்கள். | |
|---|---|
| முதற் புத்தகம் ... ... | 40 |
| இரண்டாம் புத்தகம் ... ... | 50 |
| மூன்றாம் புத்தகம் .... .... | 60 |
| நான்காம் புத்தகம் .... .... | 70 |
| ஐந்தாம் புத்தகம் ... .... | 75 |
| ஆறாம் புத்தகம் .... .... | 75 |

| சரித்திரபாடவாசகம் | |
|---|---|
| இரண்டாம் வகுப்பு ... .... | 60 |
| மூன்றாம் வகுப்பு .... ... | 1-00 |
| நான்காம் வகுப்பு .... .... | அச்சில் |
| ஐந்தாம் வகுப்பு ... .... (உலகமும் இலங்கையும் 1-ம் பாகம்) | 1-50 |
| ஆறாம் வகுப்பு ... .... (உலகமும் இலங்கையும் 2-ம் பாகம்) | [illegible] |

கொழும்புத் தமிழ்ச்
பதிவு இல. 73
10 5 1950
கமிசட் இல. 14805
7. 6. 1968

க. வைத்தியலிங்கம், அதிபர், நாவலர் அச்சுக்கூடம்,
யாழ்ப்பாணம்.